மின்சாரம் தாக்கியும் பாம்பு கடித்தும் உயிரிழந்த 19 பேர் குடும்பத்துக்கு தலா ரூ.3 லட்சம் நிதி உதவி

எடப்பாடி பழனிசாமி உத்தரவு

சென்னை, அக். 4–

மின்சாரம் தாக்கியும், பாம்பு கடித்தும் உயிரிழந்த 19 பேரின் குடும்பத்துக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்க முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:– சென்னை அம்பத்தூர் கொரட்டூர் கிராமத்தில் மின்பாதை ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த துளசி என்பவரின் மகன் மூர்த்தி என்பவர் மின்சார கோபுரத்தில் ஏற்பட்ட தீயை அணைக்க முற்பட்ட போது, தீக்காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கருங்கானூர், எலவம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த ராஜா என்பவரின் மகன் கவியரசு என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்; வேலூர் மாவட்டம், நெமிலி வட்டம், கீழாந்துரை கிராமத்தைச் சேர்ந்த முனிசாமி என்பவரின் மகன் ராஜ்குமார் என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், வெள்ளிச்சந்தை கிராமத்தைச் சேர்ந்த ராமசுவாமி என்பவரின் மகள் பானுமதி என்பவர் சாலையில் பாலம் அமைக்கும் பணியின் போது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்; திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் வட்டம், வெங்காரம்பேரையூர் கிராமத்தைச் சேர்ந்த சிங்காரு என்பவரின் மகன் அன்பரசன் என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்டம் முத்துபட்டிணம் கிராமத்தைச் சேர்ந்த சின்னையா என்பவரின் மனைவி தெய்வானை மற்றும் லெட்சுமணன் மனைவி சரண்யா ஆகிய இருவரும் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், நட்டாலம் கிராமத்தைச் சேர்ந்த தாமஸ் என்பவரின் மகன் ராபர்ட் என்பவர் மின்மாற்றியில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்; கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், மஜரா குச்சிப்பட்டியைச் சேர்ந்த வெள்ளைச்சாமி என்பவரின் மகன் பழனிசாமி என்பவர் எதிர்பாராத விதமாக அறுந்து கிடந்த மின் கம்பியை தொட்டதில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மின் பழுது பார்த்தபோது...

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், கோயம்புத்தூர் பைபாஸ் சாலை விரிவாக்கப்பணியில் மின் கம்பம் மாற்றியமைக்கும் பணியின் போது, மின் கம்பம் சாய்ந்து விழுந்ததில், ஜெயபாண்டி என்பவரின் மகன் கோபாலகிருஷ்ணன் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், அ.கலையம்புத்தூர் கிராமத்தில், பாலம் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்த ஜெயந்தி என்பவரின் கணவர் ஜெகதீசன் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பாச்சல் கிராமத்தைச் சேர்ந்த ராஜாமணி என்பரின் மகன் அனுமன் என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்; வேலூர் மாவட்டம், நெமிலி வட்டம், கீழ்வீராணம் கிராமத்தைச் சேர்ந்த முனுசாமி என்பவரின் மகன் ஆறுமுகம் என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், பெருமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த வாஞ்சிநாதன் என்பவரின் மனைவி சவுந்தரவள்ளி என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்; விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், நாராணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த ரத்தினசாமி என்பவரின் மகன் அருண்குமார் என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

பாம்பு கடித்து...

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், சாத்தம்பூண்டி கிராமத்தைச் சேர்ந்த பாஸ்கரன் என்பவரின் மகன் சௌந்தர் என்பவர் எதிர்பாராத விதமாக, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்; சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், ஓடாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த பிச்சை என்பவரின் மகள் தேவி என்பவர் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த போது, பாம்பு கடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், அச்சம்தவிழ்த்தான் கிராமத்தைச் சேர்ந்த தென்திருப்பதி என்பவரின் மகள் ரக்ஷனா என்பவர் தோட்டத்திற்கு சென்ற போது, பாம்பு கடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்; கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், செடுத்தான்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த இளஞ்சியம் என்பவரது மகன் தமிழரசன் என்பவர் பாம்பு கடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

மின்சாரம் தாக்கியும், பாம்பு கடித்தும் உயிரிழந்த 19 நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, மேற்கண்ட 19 நபர்களின் குடும்பத்திற்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

அண்ணா தி.மு.க.வுக்கு அம்பேத்கர் மக்கள் கட்சி ஆதரவு

டாக்டர் மத்தியாஸ் அறிவிப்பு

சென்னை, அக்.4–

நாங்குநேரி, விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் அண்ணா தி.மு.க. வேட்பாளர்களுக்கு அம்பேத்கர் மக்கள் கட்சி ஆதரவு அளிக்கும் என கட்சியின் தலைவர் டாக்டர் மத்தியாஸ் கூறியுள்ளார்.

சேலத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து தங்கள் கட்சி ஆதரவை மத்தியாஸ் தெரிவித்தார்.

அம்பேத்கர் மக்கள் கட்சியின் செயற்குழு கூட்டம் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் மத்தியாஸ் தலைமையில் நடை பெற்றது. இந்த கூட்டத்தில் இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு குடியரசு நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வெளிநாட்டு முதலீடுகளை ஈட்டி வந்த தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமிக்கு பாராட்டு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஜெயலலிதாவின் காலம் தொட்டு அண்ணா தி.மு.க.வை ஆதரித்து வரும் அம்பேத்கர் மக்கள் கட்சி தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நாங்குநேரி, விக்கிரவாண்டி இடைத்தேர்தல்களிலும் அண்ணா தி.மு.க.வை ஆதரிப்பது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் 2 தொகுதிகளிலும் தங்களது கட்சியின் சார்பில் இடைத்தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அண்ணா தி.மு.க. வேட்பாளர்களை வெற்றி பெற வைப்போம். ஜெயலலிதா வழியில் தடம் பதித்து ஆட்சி நடத்தி வரும் முதலமைச்சர் மற்றும் துணைமுதலமைச்சர் ஆகியோருக்கு பாராட்டு தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று டாக்டர் மத்தியாஸ் கூறியுள்ளார்.

முன்னாள் எம்.எல்.ஏ. சாவித்திரி அம்மாள் மரணம்: ஓ.பி.எஸ்.– எடப்பாடி இரங்கல்

சென்னை, அக். 4–

முன்னாள் எம்.எல்.ஏ. சாவித்திரி அம்மாள் மரணமடைந்தார்.

இது சம்பந்தமாக அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், துணை முதல்வருமான ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளரும், முதல்வருமான எடப்பாடி பழனிசாமி ஆகியோர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:–

விழுப்புரம் தெற்கு மாவட்டம், அண்ணா தி.மு.க. தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினரும், முகையூர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சாவித்திரி அம்மாள் வயது முதிர்வின் காரணமாக மரணமடைந்து விட்டார் என்ற செய்தி கேட்டு வருத்தமுற்றோம்.

ஆரம்பகால கழக உடன்பிறப்பு சாவித்திரி அம்மாள் கழகத்தின் மீதும் புரட்சித் தலைவி அம்மா மீதும், மிகுந்த விசுவாசம் கொண்டிருந்தவர்.

அன்புச் சகோதரி சாவித்திரி அம்மாளை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் அமைதி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி ஆகியோர் கூறியுள்ளனர்.

அண்ணா தி.மு.க. வெற்றி பெற்றால் தான் விக்கிரவாண்டி தொகுதி வளர்ச்சி பெறும்

துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன் பேச்சு

விழுப்புரம், அக்.4

அண்ணா தி.மு.க. வெற்றி பெற்றால் தான் விக்கிரவாண்டி தொகுதி வளர்ச்சி பெறும் என்று துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன் பேசினார்.

விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட காணையில் அண்ணா தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்திற்கு சட்டசபை துணை சபாநாயகரும், காங்கியனூர், பள்ளியந்தூர், மாம்பழப்பட்டு, கோழிப்பட்டு, மல்லிகைப்பட்டு, டட்நகர் ஆகிய ஊராட்சிகளின் தேர்தல் பொறுப்புக்குழு தலைவருமான பொள்ளாச்சி ஜெயராமன் தலைமை தாங்கினார். அப்போது அவர் பேசியதாவது:

விக்கிரவாண்டி தொகுதி அண்ணா தி.மு.க.வின் அசைக்க முடியாத கோட்டை. இந்த தொகுதியில் நடைபெற உள்ள இடைத்தேர்தலில் குறைந்தது 50 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அண்ணா தி.மு.க. வேட்பாளர் முத்தமிழ்செல்வனை வெற்றி பெற வைக்க வேண்டும்.

தி.மு.க. பொய் பிரசாரம்

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் எதிர்பாராத பின்னடைவு ஏற்பட்டது. தமிழக மக்களை ஏமாற்றி பொய் பிரசாரம் செய்து தி.மு.க. வெற்றி பெற்று விட்டது. அந்த தவறை மக்கள் தற்போது உணர்ந்துள்ளனர். தொடர்ந்து அண்ணா தி.மு.க. ஆட்சி செய்ய வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். அதற்கு முன்னோட்டமாக நடைபெற உள்ள விக்கிரவாண்டி, நாங்குநேரி ஆகிய 2 தொகுதி இடைத்தேர்தல்களிலும் அண்ணா தி.மு.க. வெற்றி பெற வேண்டும். அதற்காக நாம் அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும்.

ஜெயலலிதா மறைவுக்கு பிறகு முதல் அமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் தலைமையில் அண்ணா தி.மு.க. ஆட்சி சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த ஆட்சி தொடர்ந்து நடைபெற அண்ணா தி.மு.க. வெற்றி பெற வேண்டும்.

இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தி கொண்டிருப்பதோடு ஏழை, எளிய மக்களுக்காக சேவை செய்து வருகின்றனர். இந்த தேர்தலில் அண்ணா தி.மு.க. வெற்றி பெற்றால்தான் விக்கிரவாண்டி தொகுதி வளர்ச்சி பெறும். தொகுதி மக்களுக்கு தேவையான சாலை வசதி, குடிநீர் வசதி, பஸ் வசதி, தெருவிளக்கு வசதி உள்ளிட்ட பல்வேறு முன்னேற்ற பணிகள் நிறைவேற்றி தரப்படும்.

ஒன்றிய செயலாளர் அய்யப்பன், கண்டமங்கலம் முன்னாள் ஒன்றிய செயலாளர் கண்ணன், மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற துணைத்தலைவர் வண்டிமேடு ராமதாஸ், நகர ஜெயலலிதா பேரவை செயலாளர் கோல்டுசேகர், நிர்வாகிகள் திருப்பதிபாலாஜி, நூர்ஜியாவுதீன், சம்சுதீன்சேட், விஜயகுமார், தயாநிதி, மின்னல்சவுக், மூர்த்தி, தேவா உள்பட பலர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வீடு ஒதுக்கீட்டாளர்களுக்கு சலுகைகள் 12ந் தேதி விசேஷ கூட்டம்

சென்னை, அக். 4–

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் ஒதுக்கீடு பெற்ற மாதாந்திர தவணைதாரர்களுக்கு, வீட்டுவசதி வாரிய பணம் செலுத்துவதில் புதிய முறையில் பணம் செலுத்துவதற்கு ஒதுக்கீட்டாளர்களுக்கு அக்டோபர் 12–ந் தேதி அன்று கூட்டம் நடைபெறுகிறது.

இதுவரை ஒதுக்கீட்டாளர்கள் மாத தவணைகளை ஒதுக்கீடு பெற்ற கோட்டங்களில் பணம் செலுத்தி ரசீதுகளை பெற்று வருகின்றார்கள். ஒதுக்கீட்டாளர்கள் கோட்டங்களில் வந்து செல்லும் சிரமத்தை குறைக்கும் வகையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் புதிய நடைமுறையை அறிமுகபடுத்த உள்ளது.

அதன்படி ஒதுக்கீட்டாளர்களின் வங்கி கணக்கிலிருந்து வங்கிகளே நேரடியாக வீட்டு வசதி வாரியத்திற்கு மாதந்திர தவணை மற்றும் வாடகைகளை செலுத்த கே.கே. நகர் கோட்டம், சிறப்பு திட்ட கோட்டம் –1 மற்றும் நந்தனம் கோட்ட அலுவலத்தில் வரும் 12ந் தேதி கூட்டம் நடைபெற உள்ளது. ஒதுக்கீட்டாளர்கள் கலந்து கொண்டு பயன் பெற்று கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எல்&டி ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்
(முந்தைய பெயர் இந்தோ பசிபிக் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்.
ஏஜஜி ஹோம் பைனான்ஸ் இந்தியா லிமிடெட் மற்றும் வெய்ஜ்மான் ஹோம்ஸ் லிட்)
பதிவு அலுவலகம் : பிருந்தாவன், ஃபிளாட் நம்பர் 177, சிஎஸ்டி ரோடு,
கலினா, சாந்தாகுரூஸ் (ஈஸ்ட்), மும்பை - 400 098.
கிளை அலுவலகம்: சென்னை, மதுரை

L&T Financial Services
Housing Finance

கோரிக்கை அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(2)ன் கீழ்.

நாங்கள் சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் உங்கள் அனைவருக்கும் (கடன் பெற்றவர்/கள், கூட்டு-கடன் பெற்றவர்/கள், பொறுப்புறுதி அளித்தவர்/கள்) பதிவு செய்யப் பெற்ற தபால் மூலம் ஏற்றுக்கொண்டதை தெரிவிக்கும் வகையில், உங்கள் கடன் கணக்கின் வட்டி பணச் செலுத்துதல் மற்றும் அசல் தொகையின் தவணைகள் செலுத்தத் தவறிவிட்டதாக மற்றும் சொல்லப்பட்ட காலம் கடந்த பாக்கித் தொகையை செலுத்தத் தவறி புறக்கணித்துவிட்டதாக கோரிக்கை அறிவிப்பு அனுப்பியுள்ளோம். அதன் விளைவாக, நேஷனல் ஹவுஸிங் பேங்கினால் வெளியிடப்பட்டுள்ள சொத்து வகைப்படுத்துதல் சம்பந்தப்பட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப கணக்கேட்டில், கடன் கணக்கு செயல்படா சொத்துக்கள் (என்பிஏ) என வகைப்படுத்தப்பட்டுள்ளது. அனுப்பப்பட்ட அறிவிப்பு ''வினியோகிக்கப்படாதது'' என்று திரும்பி வந்துவிட்டது மற்றும் ஆகவே நாங்கள் இப்போது இந்த அறிவிப்பை சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் உங்கள் அனைவருக்கும் அனுப்புகிறோம்,மற்றும் கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகையை எல்&டி ஹவுஸிங் (முந்தைய பெயர் இந்தோ பசிபிக் ஹவுஸிங் ஃபைனான்ஸ் லிமிடெட் மற்றும் வெய்ஜ்மான் ஹோம்ஸ் லிட்) மும்பை மற்றும் சென்னை, மதுரை, திருச்சி கிளைக்கு இந்த அறிவிப்புத் தாளின் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள்ளாக இங்கு கீழே குறிக்கப்பட்டுள்ள தொகையை கோரிக்கை தேதியிலிருந்து பணம் செலுத்தும் மற்றும்/அல்லது கடன் கணக்கில் வரவாகும் தேதி வரை வட்டியுடன் சேர்த்து செலுத்துமாறு அறிவிப்பு அனுப்புகிறோம். இந்த அறிவிப்பில் கண்டபடி நீங்கள் உங்களுடைய பொறுப்பை நிறை வேற்றத் தவறினால், சட்டத்தின் பிரிவு 13(2) அல்லது பிரிவு 14ன் கீழ் வழங்கப்பட்டுள்ள உரிமைகள் அனைத்தையும் அல்லது ஏதேனும் ஒன்றை நடைமுறைப்படுத்த நாங்கள் வற்புறுத்தப்படுவோம். ''இது இந்த சட்டத்தின் கீழ் மற்றும்/அல்லது அவ்வப்போது நடைமுறையில் இருக்கும் எந்த சட்டத்தின் கீழ் எங்களுக்கு கிடைக்கும் எந்த உரிமைக்கும் எந்த பாரபட்சமின்றி அமையும்.'' மேலும் 30/11/2013 தேதியிட்ட அசைன்மெண்ட் ஒப்பந்தத்தின்படி மெச. சிட்டி ஃபைனான்ஸியல் கன்ஸ்யூமர் ஃபைனான்ஸ் இந்தியா லிமிடெட் இடமிருந்து அனைத்து கடன் கணக்குகளும் எல்&டி ஹவுஸிங் ஃபைனான்ஸ் லிமிடெட்டுக்கு மாற்றப்பட்டுள்ளன.

லோன் கணக்கு எண்	கடன் தாரர்/தாரர்கள் மற்றும் உப கடன் தாரர்/தாரர்கள் பெயர்	கோரிக்கை அறிவிப்பு தேதி / என்பிஏ தேதி / நிலுவையில் உள்ள தொகை		அசையா சொத்தின் விவரங்கள் (அடைமானம் வைக்கப்பட்டுள்ளது)
		என்பிஏ தேதி	நிலுவையில் உள்ள தொகை (₹)	
MDUHL17000141 மற்றும் MDUHL17000142	1. நாகேந்திரன் சி 2. கலைச்செல்வி எஸ். என் 3. பிரவீன் என்	என்பிஏ தேதி: 04.08.2019 கோரிக்கை அறிவிப்பு தேதி: 19.09.2019	₹12649611.91/- 05/09/2019 அன்று	ஆர்.எஸ். நம். 555/1ஏ2, ப்ளாட் நம். 74, செல்வி இல்லம், பெருமாள் நகர் எக்ஸ்டென்ஷன், செட்டிநாயக்கன் பட்டி, திண்டுக்கல், தமிழ்நாடு எனும் முகவரியில் அமைந்துள்ள சொத்து அனைத்தும்.
MDUHL18000038 மற்றும் MDUHL18000068	1. கார்த்திகை செல்வி ஆர் 2. ராஜாங்கம் ஜெயா 3. ஜெயா பென்ஷனர்	என்பிஏ தேதி: 04.08.2019 கோரிக்கை அறிவிப்பு தேதி: 19.09.2019	₹4079630.51/- 05/09/2019 அன்று	ஆர்.எஸ். நம். 68/8, டி. நம். 6/4ஏ, பி. நம். 13 மற்றும் 14, கே.கே. நகர், சோழவந்தான் ரோடு, 6/4ஏ, செங்குளம் கிழக்கு தெரு, 68/8 செங்குளம், 14, திருமங்கலம் முனிசிபாலிட்டி, மதுரை, தமிழ்நாடு எனும் முகவரியில் அமைந்துள்ள சொத்து அனைத்தும்.
CHNHL18000138 மற்றும் CHNHL18000234	1. ராஜன் ஏஜி 2. ஜஸ்வர்யா மெடிக்கல் ஃபவுண்டேஷன் 3. தமிழ்செல்வி எல்.	என்பிஏ தேதி: 04.08.2019 கோரிக்கை அறிவிப்பு தேதி: 19.09.2019	₹40793393.41/- 05/09/2019 அன்று	வரிசை எண். 11/3பி, 11/3பி 3ஏ, 11/2ஏ3, டி.எஸ் நம். 18 மற்றும் 19, வார்டு நம். 14, ப்ளாட் நம். சி, பழைய நம். 6, புதிய நம். 8, யு.ஆர். நகர், பார்க் ரோடு, பாடி ரோடு, பாடி வில்லேஜ், அம்பத்தூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், சென்னை, தமிழ்நாடு எனும் முகவரியில் அமைந்துள்ள சொத்து அனைத்தும்.
CHNHL15000786/	1. ராஜேந்திரன் கே 2. அலமேலு ஆர்	என்பிஏ தேதி: 04.08.2019 கோரிக்கை அறிவிப்பு தேதி: 19.09.2019	₹833967.71/- 05/09/2019 அன்று	பிளாட் நம். 75ஏ, 480 சதுர. அடி அளவுள்ள 16 அடி அகல நடைபாதை பகுதி, சர்வே நம். 1038/3 மற்றும் 1038/1டி, ஹர்ஷதா ஹோம்ஸ், வடக்குப்பட்டு கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம், தமிழ்நாடு எனும் முகவரியில் அமைந்துள்ள சொத்து அனைத்தும். 660 சதுர அடி பரப்புள்ள பிளாட் நம். 76ஏ, சர்வே நம். 1038/3 மற்றும் 1038/1டி, ஹர்ஷதா ஹோம்ஸ், வடக்குப்பட்டு கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம், தமிழ்நாடு எனும் முகவரியில் அமைந்துள்ள சொத்து அனைத்தும்
CHNHL17000353	1. கீதா ஜார்ஜ் ஜே 2. ஸ்பென்ஸர்ஸ் டிராவல் சர்வீஸஸ் லிமிடெட் 3. ஜார்ஜ் ஜேக்கப்	என்பிஏ தேதி: 04.08.2019 கோரிக்கை அறிவிப்பு தேதி: 24.09.2019	₹42822470.39/- 05/09/2019 அன்று	ஃப்ளாட் நம். எஃப்2, முதல் மாடி, ஸ்பென்ஸர் பிளாஸா, பேஸ்-1, கதவு நம். 768 மற்றும் 769, சர்வே எண். 26/2 (பகுதி), அண்ணா சாலை, நுங்கம்பாக்கம் கிராமம், சென்னை, தமிழ்நாடு எனும் முகவரியில் அமைந்துள்ள சொத்து அனைத்தும்.

தேதி: 04.10.2019
இடம்: சென்னை, மதுரை

கையொப்பம்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
எல்&டி ஹவுஸிங் ஃபைனான்ஸ் லிமிடெட்டிற்காக

TVS SRICHAKRA LIMITED
TVS BUILDING, 7 WEST VELI STREET, MADURAI – 625 001.
NOTICE OF LOSS OF SHARE CERTIFICATE(S)

Notice is hereby given that the following Share Certificate(s) issued by the Company is/are stated to have been lost/misplaced (with or without transfer deed) and the registered/bonafide holder(s) thereof has/have applied to the Company for the issue of Duplicate Share Certificate(s).

FOLIO NO.	NAME OF THE SHARE HOLDER(S)	CERT_NO.	FR_DIST NO.	TO_DIST NO.	SHARES
12898	MR A R G SUBRAMANIAM MRS SARADA SUBRAMANIAM	37247	1869809	1869833	25

The public is hereby warned against purchasing or dealing in any way with the above Share Certificate(s) . Any person who has any claim in respect of the said Share Certificate(s) should lodge such claim with the Company at its registered office at the address given above within 15 days of publication of this notice, after which no claim will be entertained and the Company will proceed to issue Duplicate Share Certificate(s) in favour of the registered holder(s).

Place: CHENNAI
Date : 03/10/2019

TVS SRICHAKRA LIMITED
P. SRINIVASAN
SECRETARY

தமிழ்நாடு அரசு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

மின்னணு கொள்முதல் முறையிலான ஒப்பந்த அழைப்பு

ந.க.எண்.141/2019/அ9 நாள்: 25.09.2019

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் மாநில நிதிக்குழு மான்யம் 2018–19ன் கீழ் வரதராஜபுரம் ஊராட்சியில் அடையாறு ஆற்றுப்பகுதியில் தாங்கு சுவர் அமைத்தல் பணி மற்றும் ஊராட்சி பொதுநிதியின் கீழ் அய்யந்தாங்கல் ஊராட்சியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணிகளை மேற்கொண்டிட குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ/கி.ஊ) மூலம் ஒரு உறைமுறை அடிப்படையில் ஒப்பந்த அழைப்பு கோருதல்.

1. ஒப்பந்த அழைப்பிற்கான தோராய மதிப்பீடு முறையே ரூ.25.75 லட்சம் மற்றும் ரூ.28.00 லட்சம்
2. செலுத்தப்பட வேண்டிய பிணை வைப்புத் தொகை குறித்தான விவரம் சம்பந்தப்பட்ட பணிகளின் ஒப்பந்த நமூனாக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
3. ஒப்பந்த நமூனாக்களை மின்னணு கொள்முதல் முறையில் www.tntenders.gov.in என்னும் இணைய தளத்தில் 03.10.2019 முதல் 17.10.2019 வரையிலான காலத்தில் பதிவேற்றம் செய்யலாம்.
4. ஒப்பந்த நமூனா இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய இறுதி நாள் மற்றும் நேரம் 17.10.2019 பிற்பகல் 4 மணி வரை.
5. ஒப்பந்த நமூனாக்களின் உறைகள் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ./கி.ஊ) அவர்கள் மூலம் மின்னணு முறையில்பதிவிறக்கம் செய்யப்படும் நாள் மற்றும் நேரம் 18.10.2019 பிற்பகல் 4 மணி முதல்.
6. முழுமையான விவரங்கள் சம்மந்தப்பட்ட ஒப்பந்த நமூனாக்களில் www.tntenders.gov.in என்னும் இணையதளத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

திட்ட இயக்குனர் (ஊ.வ.)
மா.ஊ.வ.முகமை, காஞ்சிபுரம்

செ.வெ.ஆணை எண்.71/செ.மா.தொ.அ/நாள்: 03.10.2019

EIH **அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்**
பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
CIN: L92490TN1983PLC009903
Website: www.eihassociatedhotels.in
Phone: 91-44-22344747,
Fax: 91-44-22346699

அறிவிப்பு

செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 29 மற்றும் 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே 30 செப்டம்பர், 2019ல் முடிந்த காலாண்டு/அரை ஆண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து, ஒப்புதல் அளித்து, பதிவு செய்ய கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் திங்கட்கிழமை 4 நவம்பர் 2019 அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கம்பெனியின் இணைய தளம் www.eihassociatedhotels.in மற்றும் ஸ்டாக் எச்சேஞ்சுகளின் இணைய தளங்கள் www.bseindia.com மற்றும் www.nseindia.comலும் உள்ளது.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
இந்த்ராணி ரே
கம்பெனி செயலாளர்

தேதி: 3 அக்டோபர் 2019

சுவாதீனம் எடுத்த அறிவிப்பு

SARFAESI சட்டம் இணைப்பு IV (விதி 8(1))

கீழே கையொப்பமிட்டுள்ள ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12) வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறைக்கு ஏற்ப கடன்தாரர் M/S. ஜெ பி அசோசியேட்ஸ், பிரதிநிதியாகிய அதன் பார்ட்னர்கள் திரு. ஜெ. பிரவீண் மற்றும் திருமதி. ரேகா பிரவீண் ஆகியோருக்கு அனுப்பிய 11.07.2019ம் தேதியிட்ட டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளபடி 09.07.2019 அன்று செலுத்த வேண்டிய தொகை ரூ. 2,23,35,234.65/– (ரூபாய் இரண்டு கோடியே இருபத்துமூன்று லட்சத்து முப்பத்தைந்தாயிரத்து இருநூற்றுமுப்பத்துநான்கு மற்றும் அறுபத்தைந்துபைசா மட்டும்) மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக்